# என்.பி.டி.இ.எல் தேர்வில் 6-ம் இடம் பிடித்து

# பாளை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தேசிய சாதனை



**நெல்லை,ஏப்.9**

என்.பி.டி.இ.எல் எனும் தேசியத் தொழில் நுட்பக் கற்றல் அமைப்பு தேர்வில் பாளை கல்லூரி 6வது இடம் பிடித்து தேசிய சாதனை படைத்துள்ளது

ஸ்வயம் என்.பி.டி.இ.எல் கிளை அமைப்பினை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் தொடங்க மத்திய அரசின் கல்வி அமைச்சகம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து 2018ல் தொடங்கப்பட்டது. வகுப்பறை சார்ந்த கற்றலுக்கு இணையாக, இணையம் சார்ந்த கற்றல் எனும் முறையிலமைந்த என்.பி.டி.இ.எல் மின் பாடத் திட்டங்களை ஏழு ஐ.ஐ.டி நிறுவனங்களும் இந்திய அறிவியல் நிறுவனமும் இணைந்து தயாரித்து வழங்குகின்றது.

கொரோனாவால் நாடு பாதிக்கப்பட்டுப் பொது முடக்கம் அனுசரிக்கப்பட்ட காலத்திலும் சதக் கல்லூரி என்.பி.டி.இ.எல் கிளை சிறப்பாகச் செயல்பட்டு, 2020 ஆம் ஆண்டிற்கான தரமதிப்பீட்டில் அகில இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 100 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சதக் கல்லூரி ஆறாம் இடத்தைப் பெற்றுச் சிறந்த எம்.பி.டி.இ.எல் கிளையாகத் தேர்வு செய்யப்பட்டு 'கி" எனும் உயர் மதிப்பீடு (கிரேட்) மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வழங்கப்பட்டது. 84 மாணவ மாணவியருக்கு சில்வர் கிரேடும், 4 மாணவ மாணவியருக்குக் கோல்ட் கிரேடும் அளிக்கப்பட்டது.

என்.பி.டி.இ.எல் இணையவழித் தேர்வுகள் எழுத மாணவர்களைச் சிறப்பாக நெறிப் படுத்தித் தேசிய அளவில் வெற்றி பெற வைத்தமைக்காக அந்தந்த துறைச் சார்ந்த 17 என்.பி.டி.இ.எல் நெறியாளர்களுக்கு சிறந்த தேசிய நெறியாளர் சான்றிதழ்கள்; மத்திய கல்வியமைச்சகத்தால் தரப்பட்டது.

இணையவழியில் மாணவர்களுக்குப் கற்பிப்பதற்காக சதக் கல்லூரியில் சென்டர் பார் டிஜிட்டல் லேனிங் உருவாக்கப்பட்டு, அதன் கீழ் பாம்பே ஐ.ஐ.டி ஸ்போக்கன் டுடோரியல் புரோகிராம் மற்றும் தமிழக அரசின் தகவல் தொழில் நுட்ப அகாடமி நடத்தும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப் பட்டு வருகின்றன. கலை, அறிவியல், வணிகம் மற்றும் வணிக மேலாண்மை அடங்கிய 13 துறைகள் சார்பாக 5 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 1842 மாணவ மாணவியருக்கு ஐ.ஐ.டி மும்பை சார்பில் சான்றிதழ்கள் தரப்பட்டன.தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனமான மிசிஜிகிசிஜி சார்பில் 491 மாணவ மாணவியருக்கு இணைய வழியில் திறன் மேம்பாட்டுப் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. என்.பி.டி.இ.எல் தேர்வில் அகில இந்திய அளவில் சாதனை படைத்த சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி மாணவ மாணவியரையும் பேராசிரியர்களையும், கல்லூரித் தாளாளர் பத்ஹுர் ரப்பானி, ஆட்சிக்குழுப் பொருளாளர் ஷேக் அப்துல்காதர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கல்லூரி முதல்வர் முஹம்மது சாதிக், துணை முதல்வர் செய்யது முஹம்மது காஜா ஆகியோர் பாராட்டினர்.

ph,160C, 1st Main Road, Chidambara Nagar, Tirunelveli-627357. Editor: S.Thamban.

## தேசிய தொழில்நுட்ப கற்றல் அமைப்பு தேர்வில்

# சதக்கத்துல்லா அப்பா கல்லூரி சிறப்பிடம்

■ திருநெல்வேலி

பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் மு. முஹம்மது சாதிக் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மத்திய அரசின் கல்வியமைச்சகத்தின் சார்பில் நாடெங்கிலும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெற, இணைய வழியில் கற்றலுக்கான என்பிடிஇஎல் (NPTEL) எனும் தேசியத் தொழில் நுட்பக் கற்றல் அமைப்பு (National Programme on Technology) தொடங்கப்பட்டு லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஸ்வயம் என்பிடிஇஎல் (SWAYAM NPTEL) கிளை அமைப்பினை (Local Chapter) சதக்கத்துல்லா அப்பா கல்லூரியில் தொடங்க மத்திய அரசின் கல்வி அமைச்சகம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, அவ்வமைப்பு 26.07.2018-ல் அன்று தொடங்கப்பட்டது.

வகுப்பறை சார்ந்த கற்றலுக்கு இணையாக, இணையம் சார்ந்த கற்றல் எனும் முறையிலமைந்த என்பிடிஇ.எல் மின் பாடத்திட்டங்களை 7ஐ.ஐ.டி நிறுவனங்களும் (Indian Institute of Technology) இந்திய அறிவியல் நிறுவனமும் (Indian Institute of Science) இணைந்து தயாரித்து வழங்குகிறது.

கரோனா நோயால் நாடு முழுக்க பாதிப்பு ஏற்பட்டு பொது முடக்கம் அனுசரிக்கப்பட்ட காலத்திலும் சதக்கத்துல்லா அப்பா கல்லூரி என்பிடிஇஎல் கிளையானது சிறப்பாக செயல்பட்டு, 2020 -ம் ஆண்டுக்கான தர மதிப்பீட்டில் அகில இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 100 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 6-ம் இடத்தை பெற்றுச் சிறந்த எம்பிடிஇஎல் கிளையாக தேர்வு செய்யப்பட்டு 'ஏ எனும் உயர் மதிப்பீடு (கிரேட்) மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.



▲ பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் மு. முஹம்மது சாதிக் செய்தியாளர்களிடம் பேசினார்.

▼ **இணையம் சார்ந்த கற்றல் முறையிலமைந்த என்பிடிஇ.எல் மின் பாடத்திட்டங்களை 7ஐ.ஐ.டி நிறுவனங்களும் இந்திய அறிவியல் நிறுவனமும் இணைந்து தயாரித்து வழங்குகிறது.**

84 மாணவ, மாணவிகளுக்கு சில்வர் கிரேடும், 4 மாணவ, மாணவிகளுக்கு கோல்ட் கிரேடும் அளிக்கப்பட்டது. என்பிடிஇஎல் இணையவழித் தேர்வுகள் எழுத மாணவர்களைச் சிறப்பாக நெறிப்படுத்தித் தேசிய அளவில் வெற்றி பெற வைத்தமைக்காக அந்தந்த துறைசார்ந்த 17 என்பிடிஇஎல் நெறியாளர்களுக்கு சிறந்த தேசிய நெறியாளர் சான்றிதழ்கள் மத்திய கல்வியமைச்சகத்தால் தரப்பட்டது என்று தெரிவித்தார்.

துணை முதல்வர் செய்யது முஹம்மது காஜா, கலைப்புல முதன்மையர் ச. மகாதேவன், டிஜிடல் லேர்னிங் சென்டர் (மின்வழிக் கற்றல்) புல முதன்மையர் ஷாஜுன் நிஷா, ஒருங்கிணைப்பாளர்கள் முஹம்மது ஹனீப், அபுசாலி ஷேக் ஆகியோர் உடனிருந்தனர்.